[2019] 2 எஸ்.சி.ஆர். 984

தி/ள். ஐகாம் டெலி லிமிடெட்.

எதிர்

பஞ்சாப் மாநிலம் நீர் வழங்கல்

& கழிவுநீர் வாரியம் & இன்னொருவர்

(உரிமையியல் மேல்முறையீடு எண் 2713/2019)

மார்ச் 11, 2019

முன்னிலை:

[மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். எஃப். நாரிமன்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஒயின் சாரன்]

இசைவுத் தீர்வு:

இசைவுத் தீர்வு உடன்படிக்கை - வணிகரீதியான ஒப்பந்தங்களில் ஒப்பந்தப்புள்ளியை அழைக்கும் அறிவிப்பில் இசைவுத் தீர்வு உட்கூறு - முன்கூட்டிய வைப்பீடு உட்கூறு - தன்னிச்சையான அல்லது பாகுபாடு மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு-14 ஐ மீறினால் இசைவுத் தீர்வு மன்றத்தைத் நாடும் தரப்பினரால் கோரப்பட்ட தொகையின் 10% "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகை", - தீர்ப்புரைக்கப்பட்டது: 10% முன்கூட்டிய வைப்பீடு என்பது, நீதிமன்ற அமைப்பை முடக்கும் நோக்கத்திற்கு மாறாக, ஒரு தரப்பினர் இந்த மாற்றுமுறை தகராறு தீர்க்கும் செயல்முறையைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு இசைவுத் தீர்வை நாடும் தரப்பை ஊக்கப்படுத்தாது, மேலும் இது இசைவுத் தீர்வு செயல்முறையை பயனற்றதாகவும் செலவு மிகுந்ததாகவும் ஆக்கிவிடும் – எனவே, வைப்பீட்டுத்தொகைக்கு முந்தைய உட்கூறு ரத்து செய்யப்படுகிறது - இந்திய அரசியலமைப்புச் சட்டம் - பிரிவு 14.

மேல்முறையீட்டை அனுமதித்து, இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்வு செய்தது:

தீர்வு: 1.1 ஒரு தரப்பு வெற்றிகரமாக இசைவுத் தீர்வுக்கான பிரிவை செயல்படுத்துவதற்கு முன் 10% "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகையை" செலுத்த வேண்டும் என்பது அற்பமான உரிமைக்கோரல்களைத் தவிர்ப்பதற்காகவே ஆகும். ஒப்பந்தப்புள்ளியை அழைக்கும் அறிவிப்பின் உட்கூறு 25 (xv) -இலிருந்து, இசைவுத் தீர்வு ஒரு மாற்றுமுறை தகராரைத் தீர்க்கும் செயல்முறையாகக் கருதப்படுவதாகவும், அதனால் தரப்பினருக்கு இடையிலான சர்ச்சைகள் இசைவுத் தீர்வு பிரிவின் கீழ் இருந்தால், உரிமையியல் நீதிமன்றத்திற்கு செல்வதை அது தடுப்பதற்காகவும் இருக்கிறது என்பது தெளிவாகிறது. உட்கூறு 25 (viii) ஆனது பாரபட்சமானது என்று கூற முடியாது, ஏனெனில் இது 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் மேல்முறையீட்டாளர் ஆகிய இருவருக்கும் சமமாகவே பொருந்துகிறது. இருப்பினும், தன்னிச்சையானது என்பது சட்டத்தின் பிரிவு-14 இன் ஒரு தனித்துவமான மற்றும் முக்கியமான அம்சமாகும். ஒரு அற்பமான கோரிக்கையை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யலாம். எனவே, இசைவுத் தீர்வின் முன் வெற்றி பெற்ற தரப்பினருக்கு இந்த கோட்பாட்டை செயல்படுத்துவது எப்போதும் இருக்கும், மேலும் ஒரு உரிமைக் கோரலை அற்பமானது என்று தள்ளுபடி செய்து அதிகபட்ச செலவுத்தொகையை விதிப்பது என்பது இசைவுப் பொதுவருக்கு திறந்தே இருக்கும். [பத்திகள் 7, 8, 17, 20, 21][988-எச்; 989-பி; 995-பி-சி; 996-சி]

1.2 கோரப்பட்ட தொகையில் 10% "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகை", இது பெரிய தொகைக்கு சமமாக இருக்கும். மேலும் இது அற்பமான உரிமைக்கோரல்களை தாக்கல் செய்வதற்கான நேரடி தொடர்பு இல்லாமல் வெளிப்படையாக உள்ளது, ஏனெனில் இது அனைத்து

உரிமைக்கோரல்களுக்கும் (அற்பமான அல்லது வேறுவிதமாக) பொருந்துமாறு உள்ளது. இசைவுத் தீர்வு மன்றத்தை நாடும் தரப்பினரால் செய்யப்பட்ட கூற்று அற்பமானது என்று எந்தவொரு தீர்மானத்திற்கும் முன் 10% வைப்பீடு செய்யப்பட வேண்டும். இதுபோன்ற ஒரு உட்கூறு நியாயமற்றது மற்றும் அநீதியானது மற்றும் எந்த நியாயமான மனிதனும் ஒப்புக்கொள்ளாத ஒன்று என்ற பொருளில் தன்னிச்சையாக இருக்கும் என்பதை தீர்மானிப்பதில் மனதில் கொள்ள வேண்டிய விடயத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும். உண்மையில், ஒரு கோரிக்கை தள்ளுபடி செய்யப்படலாம், ஆனால் அற்பமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் மூன்று இசைவுப் பொதுவர்கள் நியமிக்கப்படும் இடத்தில், பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை தீர்வுகள் இருப்பதாக அறியப்படுகிறது, இது இரண்டு சாத்தியமான அல்லது நம்பத்தகுந்த கருத்துக்கள் இருக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது. மேலும் அந்தக் கூற்று அற்பமானது என்பதாலோ அல்லாமல், அதன் தகுதியின் அடிப்படையில் நீக்கப்படுகிறது அல்லது அனுமதிக்கப்படுகிறது என்பதை குறிக்கும். மேலும், ஒரு கோரிக்கை நியாயமானது மற்றும் சரியானது என்று கண்டறியப்பட்டாலும், வைப்பீடு செய்யப்பட்ட தொகையை வெற்றி பெற்ற உரிமை கோருபவருக்கு திருப்பித் தரப்பட வேண்டியதில்லை. உதாரணமாக, ஒரு ஒப்பந்தத்தை சட்டவிரோதமானது என்று ரத்து செய்வதற்கும், அதன் விளைவாக ஏற்படும் சேதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு உரிமைக்கோரலை எடுத்துக் கொள்வோம். உரிமைக்கோரல் வெற்றி பெற்று, ஒப்பந்தம் சட்டவிரோதமானது என்று நீக்கறவு செய்யப்பட்டால், ஒரு கோடி இழப்பீடு கோரல் இறுதியாக பொதுவரால் பத்து லட்சங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டால், செய்யப்பட்ட வைப்பீட்டுத் தொகையில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே வெற்றிகரமான தரப்பினருக்குத் திருப்பித் தரப்படும். இசைவுத் தீர்வு நடவடிக்கைகளில் தோல்வியடைந்த தரப்பினருக்கு எதிராக மேற்கூறிய தரப்பினருக்கு ஒரு தீர்வம் இருந்தபோதிலும், செய்யப்பட்ட வைப்பீட்டுத்தொகையில் பத்தில் ஒன்பது

பங்கை இழக்க நேரிடுகிறது. இது முழு உட்பிரிவையும் முற்றிலும் தன்னிச்சையானதாக மாற்றிவிடும. இது அதிகப்படியானதாகவோ அல்லது விகிதாசாரமற்றதாகவோ இருப்பது மட்டுமல்லாமல், ஒரு இசைவுத் தீர்வு மன்றத்தில் தோற்ற ஒரு தரப்பினருக்கு, கோரப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட வைப்பீட்டுத் தொகையை விட விகிதாச்சாரப்படி குறைவாக இருக்கும் வைப்புத்தொகையின் அத்தகைய பகுதியை இழக்க உரிமை உண்டு என்ற முற்றிலும் அநியாயமான விளைவுக்கு வழிவகுக்கும். [பத்தி 23] [996-எச்; 997- ஏ-இ]

1.3 இசைவுத் தீர்வு என்பது ஒரு முக்கியமான மாற்றுமுறை தகராறு தீர்க்கும் செயல்முறையாகும், இது நீதிமன்றங்களில் வழக்குகள் அதிக அளவில் நிலுவையில் இருப்பதால் மற்றும் வழக்கு செலவுகளின் காரணமாக ஊக்குவிக்கப்பட வேண்டும். வைப்பீட்டுத்தொகை தொடர்பான எந்தவொரு தேவையும் நிச்சயமாக இந்த செயல்முறைக்கு ஒரு தடையாக இருக்கும். மேலும், ஒரு பெரிய உரிமைக்கோரலில் 10% வைப்பீட்டுத்தொகை என்பது ஒரு உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்வதற்கு வசூலிக்கப்படும் நீதிமன்றக் கட்டணத்தை விட அதிகமாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்வது எளிது. இந்த மாற்றுமுறை தகராறு தீர்க்கும் செயல்முறையை 10% முன்கூட்டியே வைப்பீடு செய்வதன் மூலம் ஒரு இசைவுத் தீர்வு மன்றத்திற்கு ஒரு தரப்பைத் தடுப்பது என்பது, இசைவுத் தீர்வு மன்றத்தைத் தேர்ந்தெடுப்பதை ஊக்கப்படுத்தாதது ஆகும். மேலும் இசைவுத் தீர்வு முறையின் நோக்கத்திற்கு மாறாக நீதிமன்ற அமைப்பை முடக்குதல், மற்றும் இசைவுத் தீர்வு செயல்முறையை பயனற்றதாகவும் அதிக செலவுடையதாகவும் ஆக்கிவிடும். எனவே, ஒப்பந்தப்புள்ளியை அழைக்கும் அறிவிப்பின் உட்கூறு 25 (viii) ஆனது ரத்து செய்யப்படுகிறது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நீக்கறவு செய்யப்படுகிறது. [பத்திகள் 24, 27, 28][997-எப், ஜி 999-டி, இ]

மத்திய உள்நாட்டு நீர் போக்குவரத்துக் கழகம் எதிர் ப்ரோஜோ நாத் கங்குலி, (1986) 3 **எஸ்.சி.சி** 156 : [1986] 2 **எஸ்.சி.ஆர்** 278 - **வேறுபடுத்தப்பட்டது.**

கல்வி இயக்குநரகம் எதிர் எடுகாம்ப் டேட்டாமெடிக்ஸ் லிமிடெட்., (2004) 4 **எஸ்.சி.சி** 19 : [2004] 2 **எஸ்.சி.ஆர்** 1010 ; *குளோபல் எனர்ஜி லிமிடெட் எதிர் அதானி எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட்.,* (2005) 4 **எஸ். சி. சி** 435: [2005] 3 **எஸ்.சி.ஆர்** 1108 ; *எஸ்.கே.ஜெயின் எதிர் ஹரியானா மாநிலம்,* (2009) 4 **எஸ்.சி.சி** 357: [2009] 2 **எஸ்.சி.ஆர்** 1080; *ஏபிஎல் இன்டர்நேஷனல் லிமிடெட் எதிர் எக்ஸ்போர்ட் கிரிடிட் கேரண்டி கார்ப் ஆஃப் இந்தியா லிமிடெட்,* (2004) 3 **எஸ்.சி.சி.** 553 ; *ஏ.எல்.கல்ரா எதிர் புராஜெக்ட் & எக்யூப்மென்ட் கார்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்,* [1984] 3 **எஸ்.சி.ஆர்** 646 ; *ஞான்டி.யோவ் சபாஜி நாயக் எதிர் பிரத்ன்யா பிரகாஷ் கடேகர்,* (2017) 5 **எஸ். சி. சி** 496: [2017] 2 **எஸ். சி. ஆர்** 95; *ஜெனரல் மோட்டார்ஸ் (ஐ) (பி) லிமிடெட் எதிர் அசோக் ராம்னிக் லால் தோலாட்,* (2015) 1 **எஸ். சி. சி** 429: [2014] 11 **எஸ். சி. ஆர்** 16; *ஜே & கே மாநிலம் எதிர் தேவ் தத் பண்டிட்,* (1999) 7 **எஸ். சி. சி** 339: [1999] 2 **சப்ளி. எஸ்சிஆர்** 1 ; *சென்ட்ரோட்ரேட் மினரல்ஸ் & மெட்டல் இன்க். எதிர் ஹிந்துஸ்தான் காப்பர் லிமிடெட்.,* (2017) 2 **எஸ். சி. சி** 228: [2016] 9 **எஸ்.சி.ஆர்** 83 ; *யூனியன் ஆஃப் இந்தியா எதிர் வரிந்தேரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட்,* (2018) 7 **எஸ்.சி.சி** 794 : [2018] 5 **எஸ்.சி.ஆர்** 587 – **அதனை சார்ந்திருந்தது.**

<u>வழக்குச் சட்டக் குறிப்பு:</u>

[1986] 2 எஸ். சி. ஆர் 278	பத்தி 5-இல்	வேறுபடுத்தப்பட்டது
[2004] 2 எஸ். சி. ஆர் 1010	பத்தி 9 இல்	சார்ந்திருந்தது.
[2005] 3 எஸ். சி. ஆர் 1108	பத்தி 10 இல்	சார்ந்திருந்தது.

[2009] 2 எஸ். சி. ஆர் 1080	பத்தி 12 க்கு	சார்ந்திருந்தது.
(2004) 3 எஸ். சி. சி. 553	பத்தி 15 இல்	சார்ந்திருந்தது.
[1984] 3 எஸ். சி. ஆர் 646	பத்தி 17 இல்	சார்ந்திருந்தது.
[2017] 2 எஸ். சி. ஆர் 95	பத்தி 20 இல்	சார்ந்திருந்தது.
[2014] 11 எஸ். சி. ஆர் 16	பத்தி 22 இல்	சார்ந்திருந்தது.
[1999] 2 சப்ளி. எஸ். சி. ஆர் 1	பத்தி 24 இல்	சார்ந்திருந்தது.
[2016] 9 எஸ். சி. ஆர் 83	பத்தி 25 இல்	சார்ந்திருந்தது.
[2018] 5 எஸ். சி. ஆர் 587	பத்தி 26 இல்	சார்ந்திருந்தது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு ; உரிமையியல் மேல்முறையீட்டு எண். 2713/2019.

சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் 09.05.2017 தேதியிட்ட உ.நீ.ம. எண்: 4882/2017-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

மேல்முறையீட்டாளர்களுக்காக திரு.கரண் மெஹ்ரா, திரு.அர்ஜுன் டி. சிங், திரு.சந்தீப் குமார் ஜா ஆகியோர் ஆஜராகினர்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக திரு.விஜய் குமார் கௌஷல், திரு.விபூதி சுஷாந்த் குப்தா, திரு.ராம் நரேஷ் யாதவ் ஆகியோர் ஆஜராகினர்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு.ஆர்.எஃப் நாரிமன் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. 2008 ஆம் ஆண்டில், பதிண்டாவில் உள்ள பஞ்சாப் மாநில நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், பல்வேறு நகரங்களுக்கான நீர் வழங்கல் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு, கழிவுநீர் திட்டம், நீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர்

சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றுக்காக, முழுமைப்பணி ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியை கோரும் அறிவிப்பை வெளியிட்டது. 25.9.2008-ஆம் தேதியன்று, இந்தியாவில் இயங்கும் கட்டிடவியல்/மின்சாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள மேல்முறையீட்டு நிறுவனம், மேற்கூறிய பணிக்கு மிகவும் பொருத்தமானது எனக் கண்டறியப்பட்டப் பின்னர், மேற்படி ஒப்பந்தப்புள்ளியானது அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 16.1.2009-ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளர் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு இடையே ஒரு முறையான ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியை கோரும் அறிவிப்பு முறையான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமைந்தது என்பதைக் குறிப்பிடலாம். ஒப்பந்தப்புள்ளியை கோரும் அறிவிப்பில் விரிவான இசைவுத் தீர்வுக்கான உட்கூறு உள்ளது. இந்த விடயத்தில், உட்கூறு 25(viii) ஐ நாங்கள் கவனத்தில் கொண்டு, கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:-

> "viii. அற்பமான கோரிக்கைகளைத் தவிர்ப்பதற்காக, இசைவுத் தீர்வு மன்றத்தைத் நாடும் தரப்பினர், ஒவ்வொரு உரிமைக்கோரலின் கீழும் கோரப்பட்ட தொகையைக் குறிப்பிடும் பொருண்மைகள் மற்றும் கணக்கீடுகளின் அடிப்படையில் பூசலைக் குறிப்பிடுவதுடன், கோரப்பட்ட தொகையில் பத்து சதவிகிதத்திற்கு (10%) "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகை" வழங்க வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தின் இன்றியமையாத விதிமுறையாகும். மேலும் உரிமைக் கோரப்பட்ட தொகையில், இசைவுப் பொதுவர் பெயரில் ஒரு பட்டியலிடப்பட்ட வங்கியில், அவரது அதிகாரப்பூர்வ பதவியின்படி தீர்வம் அறிவிக்கப்படும் வரை அவர் அந்தத் தொகையை வைப்பில் வைத்திருக்க வேண்டும். உரிமைக் கோருபவருக்கு சாதகமாக தீர்வம் வழங்கப்படுமாயின், கோரப்பட்ட தொகையின் விகிதாச்சாரத்தில்

அவருக்கு வைப்பீட்டுத் தொகை திருப்பித் தரப்படும் மற்றும் மீதித் தொகை ஏதேனும் இருந்தால் பறிமுதல் செய்யப்பட்டு மற்ற தரப்பினருக்கு வழங்கப்படும்.

3. மேல்முறையீட்டாளர், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் அதே இசைவுத் தீர்வு சட்டப்பிரிவைக் கொண்ட அதேபோன்ற ஒப்பந்தங்களை மேற்கொண்டார். எனவே, அந்த விவகாரங்களில் நடுவரை நியமிப்பது தொடர்பாக, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு கடிதம் அனுப்பியதோடு, 10% வைப்பீட்டுத் தொகையைத் தள்ளுபடி செய்யக் கோரியிருந்தார். அதற்கு எந்த பதிலும் கிடைக்காததால், மேல்முறையீட்டாளர் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் நீதிப்பேராணை மனு எண். 18917 /2016 -ஆக ஒரு நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார். இது போன்ற ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை எந்த வகையிலும் தன்னிச்சையானது அல்லது நியாயமற்றது என்று கூற முடியாது என்று கூறி அந்த நீதிப்பேராணை மனு 14.9.2016 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

4. 8.3.2017-ஆம் தேதியன்று, உரிமையியல் நீதிப்பேராணை மனு எண். 4882/2017 -யை தாக்கல் செய்வதன் மூலம் இசைவுத் தீர்வுக்கான உட்கூறுவின் செல்லுபடித்தன்மையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தை அணுகினார். உயர்நீதிமன்றம் எதிர்த்துரைக்கப்பட்ட தீர்ப்பின் மூலம், அதன் முந்தைய தீர்ப்பைப் பின்பற்றி இந்த நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்தது.

5. மேல்முறையீட்டாளர் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில் உள்ள இசைவுத் தீர்வுக்கான உட்கூறு ஆனது ஒட்டுப்பண்புடனான ஒப்பந்தம் என்றும், மேலும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு இடையே நியாயமற்ற பேரம் பேசும் வலிமை இருப்பதால், அந்த உட்பிரிவானது **மத்திய**

உள்நாட்டு நீர் போக்குவரத்து கழகம் எதிர் ப்ரோஜோ நாத் கங்குலி, (1986) 3 எஸ்.சி.சி. 156 – என்ற வழக்கின் தீர்முடிவின் அடிப்படையில் இரத்து செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். இசைவுத் தீர்வு என்பது ஒரு மாற்றுமுறை தகராறு தீர்க்கும் செயல்முறையாக இருப்பதால், 10% வைப்பீடானது, மேற்கூறிய செயல்முறையில் நாடுவதில் தடையாக இருக்கும் என்றும் அவர் வாதிட்டார். மேலும், உரிமைக்கோரல்கள் இறுதியில் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனக் கண்டறியப்படலாம், ஆனால் அவை அற்பமானதாக இருக்க வேண்டியதில்லை. மேலும், அற்பமான உரிமைக்கோரல்கள் அதிகமான செலவுத்தொகையினை விதிப்பதன் மூலம் ஈடுசெய்யப்படலாம். மேலும், தீர்வம் உரிமை கோருபவருக்கு சாதகமாக இருந்தால் கூட, அவருக்குத் திரும்ப அளிக்கப்படக்கூடிய தொகை என்பது தீர்ப்பளிக்கப்பட்ட தொகையின் விகிதாச்சாரத்தில் மட்டுமே இருக்கும், மீதமுள்ளவை இழக்கப்பட வேண்டும். 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் தரப்பில் இது மேலும் தன்னிச்சையான மற்றும் மேலாதிக்கமான நடவடிக்கையாக இருக்கும் என்று சமர்ப்பிக்கப்பட்டது.

6. எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், தற்போதைய வழக்கில் சட்டத்தின் பிரிவு 14-இல் எந்த மீறலும் இல்லை என்றும் வாதிட்டார். உட்கூறு 25(viii) ஆனது இரு தரப்பினருக்கும் சமமாக பொருந்தும் என்பது தெளிவாகிறது. எனவே, கூறப்பட்ட துணைக்கூறு பாரபட்சமானது என்று ரத்து செய்ய முடியாது. மேலும், மத்திய உள்நாட்டு நீர் போக்குவரத்து கழகம் (மேற்கண்ட) வழக்கில் உள்ள கோட்பாடானது, வணிகரீதியான ஒப்பந்தங்களுக்குப் பயன்படுத்த முடியாது. மேலும், இதுபோன்ற வழக்குகளில், இந்த நீதிமன்றம் இதுபோன்ற எதிர்ப்பினை ஏற்கவில்லை என்றும் வாதிட்டார்.

7. இரு தரப்பு வழக்கறிஞர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்த பிறகு, ஒரு தரப்பினர் இசைவுத் தீர்வு விதியை வெற்றிகரமாக

செயல்படுத்துவதற்கு முன் செலுத்த வேண்டிய 10% "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகை" என்பது அற்பமான உரிமைக்கோரல்களைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்டது என்பதை காண முடிந்தது. உட்கூறு 25 (xv) ஆனது முக்கியமானதாகும், மேலும் அது அதன் பொருள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

> "xv. இந்த ஒப்பந்தத்தின் கீழ் இசைவுத் தீர்வு மன்றத்தின் எல்லைக்குள் சிக்கல் இருந்தால், அவற்றை முதலில் இசைவு தீர்வு முறையின்படி நடைமுறைகளை நிறைவு செய்யாமல் எந்தவொரு கேள்வியும் எந்த ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் முன்னும் கொண்டு வரப்படக் கூடாது. ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கும், பணிகளை முடிப்பதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கும் பொறுப்பான பொறியாளரை நிலுவையில் உள்ள இசைவுத் தீர்வுமன்ற நடவடிக்கைகள் இடையூறு செய்யாது.

8. இந்த பிரிவிலிருந்து, இசைவுத் தீர்வு என்பது ஒரு மாற்றுமுறை தகராரைத் தீர்க்கும் செயல்முறையாகக் கருதப்படுகிறது என்பதும், தரப்பினர்களுக்கிடையேயான தகராறுகள் இசைவுத் தீர்வு சட்டத்தின் கீழ் இருந்தால், உரிமையியல் நீதிமன்றத்தை நாடுவது தவிர்க்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

9. ஒப்பந்தப்புள்ளிக்கான அழைப்பின் விதிமுறைகள், அவை தன்னிச்சையாகவோ, பாரபட்சமாகவோ அல்லது தீங்கிழைத்ததாகவோ இருந்தால் ஒழிய, அவை ஒப்பந்தத்தின் வரம்பிற்குள் இருப்பதால், அவை நீதித்துறை ஆய்வுக்கு உட்பட்டவை அல்ல என்பது நன்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே, **கல்வி இயக்குநரகம் எதிர் எடுகாம்ப் டேட்டாமேட்டிக்ஸ் லிமிடெட்.,** (2004) 4 எஸ்.சி.சி 19 - என்ற வழக்கில், இந்த நீதிமன்றம் கூறியது:

"9. தன்னிச்சை அல்லது ஒருசார் விருப்புகளைத் தடுக்க, நீதிமன்றங்கள் தங்களின் நீதித்துறை மேலாய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அரசு அல்லது அதன் முகமைகளால் ஒப்பந்தங்களை வழங்குவதை ஆராயலாம் என்பது இப்போது நன்றாகத் தீர்க்கப்பட்ட ஒன்றாகும். இருப்பினும், இதுபோன்ற விடயங்களில் நீதித்துறை மேலாய்வு அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் உள்ளார்ந்த வரம்புகள் உள்ளன. ஒப்பந்த விஷயங்களில் அனுமதிக்கப்படும் நீதித்துறை மேலாய்வு, ஒப்பந்தப்புள்ளிகளை வழங்குவதன் மூலம் ஏலங்களை கோருவது குறித்தானது, **டாடா செல்லுலார் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா** [(1994) 6 எஸ்.சி.சி. 651] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தால் ஆழமாக ஆராயப்பட்டது. முழு வழக்கையும் ஆராய்ந்த பிறகு, பின்வரும் கோட்பாடுகள் கண்டறியபட்டுள்ளன:

"94. மேற்கூறியவற்றிலிருந்து அறியக்கூடிய கோட்பாடுகள் :

(1) நவீனப்போக்கான நிர்வாக நடவடிக்கைகளில் நீதித்துறை தடையினைச் சுட்டிக்காட்டுகிறது.

(2) நீதிமன்றம் மேல்முறையீட்டு நீதிமன்றமாக அமர்வதில்லை, ஆனால் முடிவு எடுக்கப்பட்ட விதத்தை மேலாய்வு செய்கிறது.

(3) நிர்வாக முடிவை திருத்தும் நிபுணத்துவம் நீதிமன்றத்திற்கு இல்லை. நிர்வாக முடிவை மறுபரிசீலனை செய்ய அனுமதிக்கப்பட்டால், அது தவறு செய்யக்கூடிய தேவையான நிபுணத்துவம் இல்லாமல் அதன் சொந்த முடிவையும் மாற்றும்.

(4) ஒப்பந்தப்புள்ளிக்கான அழைப்பின் விதிமுறைகள் நீதித்துறை ஆய்வுக்கு அனுமதிக்கப்படாது, ஏனெனில் ஒப்பந்தப்புள்ளிக்கான அழைப்பு ஒப்பந்த எல்லைக்குள் உள்ளது. பொதுவாக, ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்வது அல்லது ஒப்பந்தத்தை

வழங்குவது என்பது பல அடுக்குப் பேச்சுவார்த்தைகளின் மூலம் எட்டப்படுகிறது. பெரும்பாலும், அத்தகைய முடிவுகள் நிபுணர்களால் தரத்தின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.

(5) அரசாங்கத்திற்கு ஒப்பந்த சுதந்திரம் இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு நியாயமான செயல்பாடானது ஒரு நிர்வாக பகுதி அல்லது அரை நிர்வாக பகுதியில் செயல்படும் ஒரு நிர்வாக அமைப்புக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது. எவ்வாறாயினும், அந்த முடிவு நியாயத்தன்மைக்கான வெட்னெஸ்பரி கோட்பாட்டை பயன்படுத்துவதன் மூலம் (மேலே சுட்டிக்காட்டப்பட்ட அதன் பிற பொருண்மைகள் உட்பட) அவை சோதிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், ஆனால் தன்னிச்சையான தன்மையால் பாதிக்கப்படாத அல்லது தவறான நம்பிக்கைகளால் செயல்படாததாக இருக்க வேண்டும்.

(6) முடிவுகளை ரத்து செய்வது நிர்வாகத்தின் மீது பெரும் நிர்வாகச் சுமையை சுமத்தலாம் மற்றும் அதிகமான நிர்ணயிக்கப்படாத வரவுசெலவுத் தொகைக்கு வழிவகுக்கலாம்.*""*

(அசலாக வலியுறுத்தப்பட்டது)

"12. இந்த முடிவுகளில், ஒப்பந்தப்புள்ளிக்கான அழைப்பின் விதிமுறைகள் நீதித்துறை ஆய்வுக்கு அனுமதிக்கப்படவில்லை, அவை ஒப்பந்தத்தின் வரம்பிற்குள் உள்ளன என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியின் விதிமுறைகளை அமைப்பதில் அரசுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். ஒரு நிர்வாகத் துறையில் உள்ள ஒரு நிர்வாக அமைப்பிற்கு அவசியமான ஒன்றாக அதன் நியாயமான செயல் இருக்க வேண்டும். நிர்வாகக் கோட்பாடு முடிவு தன்னிச்சையாகவோ, பாரபட்சமாகவோ, தவறானதாகவோ அல்லது

ஒருபுறச்சாய்வாகவோ இருந்தால் மட்டுமே நீதிமன்றங்கள் அதில் தலையிடும். குறிப்பிட்ட சூழ்நிலைகளால் தேவைப்படக்கூடிய நடைமுறைச் சரிசெய்தல்களைப் பெறுவதற்கு அதற்கு உரிமை உண்டு. ஒப்பந்தப்புள்ளியில் உள்ள வேறு சில விதிமுறைகள் நியாயமானதாகவோ, புத்திசாலித்தனமாகவோ அல்லது தர்க்கரீதியாகவோ இருந்திருக்கும் என்று கருதுவதால், அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விதிமுறைகளை நீதிமன்றங்கள் இரத்து செய்ய முடியாது. கொள்கை முடிவு தன்னிச்சையாகவோ, பாரபட்சமாகவோ அல்லது தவறானதாகவோ இருந்தால் மட்டுமே நீதிமன்றங்கள் தலையிட முடியும்.

10. **குளோபல் எனர்ஜி லிமிடெட் எதிர் அதானி எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட்.,** (2005) 4 எஸ்.சி.சி. 435, என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கூறியதுதாவது:

"10. எனவே, ஒப்பந்தப்புள்ளிக்கான அழைப்பின் விதிமுறைகள் நீதித்துறை ஆய்வுக்கு அனுமதிக்கப்படவில்லை என்பதும், ஒப்பந்தத்தின் எல்லைக்குள் இருக்கும் ஒப்பந்தப்புள்ளியின் விதிமுறைகள் முற்றிலும் தன்னிச்சையாக, பாரபட்சமாகவோ அல்லது வன்மமாக செயல்படுத்தப்பட்டதாகவோ இருக்கும் வரை நீதிமன்றங்கள் அவற்றை நீக்க முடியாது என்பதும் நன்கு தீர்மானிக்கப்பட்ட கொள்கையாகும். இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புகளின் மூலம் தீர்க்கப்பட்ட சட்டத்தின் நிலை இதுவாக இருப்பதால், இந்த நீதிப்பேராணை மனுவை ஏற்றுக்கொண்ட முதல் நாளிலேயே கற்றறிந்த தனி நீதிபதி இடைக்கால உத்தரவை பிறப்பித்து, மேல்முறையீட்டாளர்கள் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட உண்மையான தேதியிலிருந்து மூன்று நாட்கள் வரை வங்கி உத்தரவாதம் அல்லது

வங்கியாளர்களின் காசோலையை வழங்குவதன் மூலம் உறுதிப்பணம் செலுத்த அனுமதித்தது ஆச்சரியமளிக்கிறது. கற்றறிந்த தனி நீதிபதியின் உத்தரவு முற்றிலும் சட்டவிரோதமாக இருப்பதால், எனவே, நீதியர் ஈராயத்தின் அமர்வு சரியாகவே அதை நீக்கறவு செய்துள்ளது.

11. எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், **மத்திய உள்நாட்டு நீர் போக்குவரத்து கழகம்** (மேற்கண்ட), என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்பில், தனியாருக்கும் அரசுக்கும் இடையே சமமற்ற பேரம் பேசும் ஆற்றல் உள்ள ஒப்பந்தங்கள், அவை அறிவுக்கு ஒவ்வாதவை என்ற அடிப்படையில் நீக்கறவு செய்யப்பட்டு வைக்கப்பட வேண்டிய ஒப்பந்தங்களாகும், மேலும் இரு தரப்பினரும் வணிகரீதியான நபர்களாக மற்றும் ஒப்பந்தம் ஒரு வணிகரீதியான பரிவர்த்தனையாக இருக்கும் இடத்தில் அது பொருந்தாது (கூறப்பட்ட தீர்ப்பின் பத்தி 89 ஐப் பார்க்கவும்). இந்த விடயத்தைப் பொறுத்தவரை, இந்த தீர்ப்பின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் வாதம் தோல்வியடைய வேண்டும் என்று சரியாக வாதிடப்பட்டது.

12. **எஸ்.கே. ஜெயின் எதிராக ஹரியானா மாநிலம்**, (2009) 4 எஸ்.சி.சி. 357 இல், இந்த நீதிமன்றம் ஒரு ஒப்பந்தத்தில் ஒரு இசைவுத் தீர்வுக்கான விதியைக் கையாண்டது:-

"**11.** ஒப்பந்தத்தின் உட்கூறு 25-ஏ இன் துணைக்கூறு (7) பின்வருமாறு கூறுகிறது:

"25-ஏ. (7) இந்த ஒப்பந்த உடன்படிக்கையின் மற்றொரு விதி என்னவென்றால், இசைவுத் தீர்வுமன்றத்தை நாடும் தரப்பினர் ஒப்பந்தக்காரராக இருந்தால், கீழே கொடுக்கப்பட்டுள்ள

விவரங்களின்படி நிர்ணயிக்கப்பட்ட தொகையை, ஒப்பந்ததாரர் பணிக்குப் பொறுப்பான நிர்வாகப் பொறியாளரின் திருப்திக்கு ஏற்ப ஒப்பந்தக்காரர் ஒரு பாதுகாப்பு வைப்பீட்டுத் தொகையை வழங்காத வரையில், இசைவுத் தீர்வுமன்றத்திற்கான எந்தச் சுட்டுகையும் பராமரிக்கப்படாது. அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட தொகையானது, இசைவுத் தீர்வு மன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன், உரிமைக் கோரும் தரப்பினருக்கு எதிராக நடுவரால் வழங்கப்பட்ட செலவுகள், அதனுடன் சரிசெய்யப்படுமம. அவ்வாறு சரிசெய்யப்பட்டப் பிறகு, அத்தகைய செலவுகள் ஏதும் வழங்கப்படமால் இருந்தால், வைப்பு தொகை முழுவதுமாக, நடுவர் மன்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் ஒப்பந்ததாரருக்கு முழுத் தொகையும் அவருக்குத் திருப்பித் தரப்படும்-

கோரும்தொகை	*பாதுகாப்பு வைப்பீட்டுத் தொகையின் விகிதம்*
1. ரூ. 10,000 கீழான கோரியத்தொகை	கோரியத்தொகையில் 2%
2.ரூ 10,000 & அதற்கு மேல் மற்றும் ரூ 1,00,000 கீழானால் கோரியத்தொகை	கோரியத்தொகையில் 5%
3. ரூ 1,00,000 & அதற்கு மேல்	கோரியத்தொகையில் 7%

13. அத்தகைய ஒரு உட்கூறை நிலைநிறுத்துவதில், இந்த நீதிமன்றம் **மத்திய உள்நாட்டு நீர் போக்குவரத்து கழகத்தின் (மேற்கண்ட)** வழக்கில் உள்ள தீர்ப்பைக் குறிப்பிட்டு, இந்த தீர்ப்பை இப்போதுள்ள வழக்கிற்கு வேறுபடுத்தி, அதாவது, சமமற்ற பேரம் பேசும் சக்தி என்ற கருத்து வணிகரீதியான ஒப்பந்தங்களின் விடயத்தில் பொருந்தாது என்றும் குறிப்பிட்டது. பின்னர், அது பின்வருமாறு தீர்ப்பளித்தது:-

"14. சட்டத்தின் கூறு 25-அ இன் உட்கூறு (7) -இன் கீழ் செலுத்த வேண்டிய பங்கில் ஒரு வரம்பு இருக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் சமர்பித்துள்ளார். இந்த மனுவில் எந்த அடிப்படையும் இல்லை என்பது தெளிவாகிறது. இது சம்பந்தப்பட்ட பங்கின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கோரும் தொகை அதிகமாக இருந்தால், வசூலிக்கப்படும் கட்டணத் தொகை அதிகமாகும். அதில் ஒரு தர்க்கம் இருக்கிறது. இது அற்பமான மற்றும் பகட்டான உரிமைக் கோரல்களைத் தடுப்பதற்கான சமநிலை காரணியாகும். மேல்முறையீட்டாளர்களின் மனுவில் இலக்கமானது மேம்பட்ட அளவில் இருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டால், குறைந்த தொகைக்கு உரிமைக் கோருபவர்களை விட அதிக தொகைக்கு உரிமைக் கோருபவர் சிறந்த நிலையில் இருப்பார்."

14. இந்த தீர்ப்பில், ஒரு இசைவுத் தீர்வுக்கான பிரிவில் உள்ள மேற்கூறிய நிபந்தனை தன்னிச்சையானது என்பதால், இந்திய அரசியலமைப்பின் 14 வது பிரிவை மீறுவதாக உள்ளது என்ற எந்தவொரு வாதமும் இல்லை. **மத்திய உள்நாட்டு நீர் போக்குவரத்து கழகம்** (மேற்கண்ட) வழக்கு பொருந்தும் என்று மட்டுமே வாதம் எடுக்கப்பட்டது மற்றும் பாதுகாப்பு வைப்பீட்டுத் தொகை மூலம் செலுத்த வேண்டிய பங்கில் ஒரு வரம்பு இருக்க வேண்டும், அந்த இரண்டு வாதங்களும் இந்த நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன. மேலும், இசைவுத் தீர்வு மன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன், பாதுகாப்பு வைப்பீட்டுத் தொகையானது, முதலில் இசைவுத் தீர்வரால் கோரும் தரப்பினருக்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் செலவுகளுக்கு ஈடுசெய்யப்படும். மேலும் அத்தகைய சரிசெய்தலுக்குப் பிறகு மீதமுள்ள தொகை, வைப்பீடு செய்யும் தரப்பினருக்குத் திருப்பித் தரப்படும். இந்த கூற்றானது, உட்கூறு 25 (viii) இலிருந்து வேறுபட்டது, இது, நாம் பார்த்தபடி, அனைத்து வழக்குகளிலும் வைப்பீட்டுத் தொகையானது

கோரப்பட்ட தொகையில் 10% ஆக இருக்க வேண்டும் என்பதையும், கோரப்பட்ட தொகையில் தீர்ப்பளிக்கப்பட்ட தொகைக்கு ஏற்ற விகிதத்தில் மட்டுமே தொகையை திரும்பப்பெற முடியும் என்பதையும் தெளிவாக கூறுகிறது. மற்ற தரப்பினர் வழக்கில் தோற்றிருந்தாலும், கோரப்பட்ட தொகையைப் பொறுத்து, மீதிப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு, மற்ற தரப்பினருக்கு வழங்கப்படும் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. இது அவ்வாறு இருப்பதால், இந்தத் தீர்ப்பு முற்றிலும் வேறுபடுத்தக்கூடியது மற்றும் தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்குப் பொருந்தாது.

15. **ஏபிஎல் இன்டர்நேஷனல் லிமிடெட் எதிர் எக்ஸ்போர்ட் கிரிடிட் கேரண்டி கார்ப்பரேஷன் ஆ:ப் இந்தியா லிமிடெட்.**, (2004) 3 எஸ்.சி.சி 553, இந்த நீதிமன்றம் ஒப்பந்தத் துறையில் கூட, "அரசு" அதிகாரிகள் அல்லது அதன் அமைப்புகளாக இருப்பவர்கள் அரசமைப்பின் சட்டத்தின் பிரிவு 14 இன் தேவைக்கேற்ப நியாயமாகவும், நேர்மையாகவும், தக்கக்காரணங்களோடும் செயல்பட வேண்டும் என்ற நிபந்தனை தொடர்கிறது என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, இந்நீதிமன்றம் கூறியதாவது:-

> "**23.** இந்த நீதிமன்றத்தின் மேற்கூறிய அவதானிப்புகளிலிருந்து, அரசு அல்லது அரசின் ஒரு கருவி ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினராக இருந்தால், அது நியாயமாகவும், நேர்மையாகவும், தக்கக்காரணங்களோடும் செயல்படுவதற்கு சட்டத்தின்பால் கடமைப்பட்டுள்ளது, இது இந்திய அரசியலமைப்பின் சட்டத்தின் பிரிவு-14 இன் தேவையாகும். எனவே, மேல்முறையீட்டாளர்களின் கூற்றை நிராகரிப்பதன் மூலம், அரசின் கருவியாக முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு-14 இன் தேவைக்கு முரணாக செயல்பட்டால், நீதிப்பேராணை நீதிமன்றம் முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் தன்னிச்சையான

செயல்களை சரியாக அமைக்க தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க முடியும் என்பதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை....

xxx xxx xxx

27. மேற்கண்ட எங்கள் விவாதத்திலிருந்து, ஒரு நீதிப்பேராணை மனுவை பராமரிக்கும் தன்மை குறித்து பின்வரும் சட்டக் கோட்பாடுகள் வெளிப்படுகின்றன:

(அ) ஒரு பொருத்தமான வழக்கில், ஒரு அரசிற்கு அல்லது அரசின் கருவிக்கு எதிராக ஒப்பந்தக் கடமையினால் எழும் ஒரு நீதிப்பேராணை மனு விசாரிப்பதற்கு பராமரிக்கக்தக்கது.

xxx xxx xxx

53. மேற்கூறியவற்றிலிருந்து, அரசின் ஒரு கருவியானது, அதன் ஒப்பந்த, அரசியலமைப்பு அல்லது சட்டப்பூர்வ கடமைகளில், பொது நன்மைக்கும், பொது நலனுக்கும் விரோதமாக, நேர்மையற்ற, நியாயமற்ற மற்றும் தக்க காரணமற்ற முறையில் செயல்படும் போது, அது உண்மையில் அரசியலமைப்பின் சட்டத்தின் 14 வது பிரிவில் காணப்படும் உத்தரவாதத்திற்கு முரணாக செயல்படுகிறது என்பது தெளிவாகிறது."

16. எனவே, மேற்கூறிய உட்கூறு 25 (viii) ஆனது தன்னிச்சையானது அல்லது பாரபட்சமானது மற்றும் இந்திய அரசியலமைப்பின் சட்டத்தின் பிரிவு 14 ஐ மீறுவதாகக் கூற முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும் .

17. மேற்குறிப்பிட்ட உட்கூறானது, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் மேல்முறையீட்டாளருக்கும் சமமாக பொருந்துவதால், அது பாரபட்சமானது என்று கூற முடியாது என்று எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்கறிஞரின் கருத்துடன்

நாங்கள் உடன்படுகிறோம். எவ்வாறாயினும், தன்னிச்சையானத் தன்மையானது சட்டத்தின் பிரிவு-14 இன் தனி மற்றும் தனித்துவமான அம்சமாகும். **ஏ.எல் கல்ரா எதிர் தி ப்ராஜெக்ட் & எக்யூப்மென்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்,** [1984] 3 எஸ்.சி.ஆர் 646 இல், தன்னிச்சையானது பாரபட்சத்தின் ஒரு அம்சம் மட்டுமே என்ற சமர்ப்பிப்பை இந்த நீதிமன்றம் நிராகரித்தது. ஸ்ரீ லால் நரேன் சின்ஹாவின் வாதம் இவ்வாறு பதிவு செய்யப்பட்டது (பக்கம் 661-இல்):-

> "எந்தவொரு குறிப்பிட்ட வேண்டுகோளும் இல்லாத நிலையில், வேறு எவரும் மேல்முறையீட்டாளராக இதேபோல் அமைந்திருக்கிறார்களா அல்லது வேறுவிதமாக நடத்தப்படவில்லையா என்பதைச் சுட்டிக்காட்டி பாரபட்சமாக நடத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது மற்றும் அரசியலமைப்பின் சட்டத்தின் பிரிவு 14 அல்லது பிரிவு 16-க்கு முரணாக இருக்கும் குற்றச்சாட்டில் எந்த நிவாரணமும் கோர முடியாது. பாகுபாடு காட்டப்படுவது என்பது சமமானவர்களுக்கிடையிலான ஒப்பீடு என்ற கருத்தை கொண்டுவருகிறது என்றும், அதன் விளைவாக ஏற்படும் சமத்துவமின்மை சுட்டிக்காட்டப்பட்டால், அவ்வாறு அளிக்கப்பட்ட நடத்துமுறையில் ஏற்படும் சமத்துவமின்மைம சுட்டிக்காட்டப்பட்டால், பாகுபாடு என்ற குற்றச்சாட்டை விசாரிக்க முடியும், மேலும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு மறுக்கப்பட்டுள்ளது என்று ஒருவர் கூறலாம் என சமர்ப்பிக்கப்பட்டது. தன் சமர்ப்பிப்பை விரிவுபடுத்தி, சட்டத்தின் பிரிவு 14-இல் 'சமத்துவம்' என்ற வெளிப்பாட்டைப் பயன்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டு அது இரட்டைத்தன்மை மற்றும் ஒப்பீட்டினைக் கொண்டுவருகிறது, இது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் சூழ்நிலையை கண்டறிகிறது மற்றும் ஒப்பிடுவதற்கான விடயப்பொருள் கிடைக்காத நிலையில், பாகுபாட்டிற்கான கோரிக்கை தோல்வியடைய வேண்டும். ஒரு

முடிவாக, ஒப்பீட்டு மதிப்பீட்டிற்கான விடயப்பொருள் இல்லாத நிலையில், பாரபட்சம் என்ற குற்றச்சாட்டை மட்டும் நீடிக்க முடியாது, ஆனால் செயல் தன்னிச்சையானது என்ற அடிப்படையில் நிர்வாக நடவடிக்கையை ரத்து செய்ய முடியாது என்று வலியுறுத்தப்பட்டது.

18. இந்த வாதமானது (பக்கம் 662-663 இல்) எதிர்மறையாக கூறுவது யாதெனில்:-

"இவ்வாறு செயலக/நிர்வாக நடவடிக்கைகளில் சட்டத்தின் பிரிவு 14-ஆனது தன்னிச்சையானதை தகர்க்கிறது என்பது நன்கு நிலைப்பெற்ற ஒன்றாகும், ஏனெனில் தன்னிச்சையான எந்தவொரு செயலும் சமத்துவத்தை மறுப்பதாக இருக்க வேண்டும். பாரபட்சமான அணுகுமுறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இரு நபர்களுக்கிடையேயான ஒப்பீட்டு மதிப்பீட்டோடு சமத்துவ மறுப்பை செய்ய வேண்டியதில்லை. தன்னிச்சையான ஒரு செயலே, சட்டத்தின்பால் இருக்கும் சமமான பாதுகாப்பை மறுக்கிறது. அரசியலமைப்பு அமர்வு, *அஜய் ஹாசியாவின்* வழக்கை [1981] 2 எஸ்.சி.ஆர். 79] குறித்துக் கவனித்ததோடு, இந்த விடயத்தை முரணிற்கு அப்பாற்பட்டதாகக் கூறியது, அது கூறியது, 'எங்கெல்லாம் அரசின் நடவடிக்கையில் தன்னிச்சையான போக்கு இருக்கிறதோ, அது சட்டமன்றத்தின் நடவடிக்கையாகவோ, நிர்வகத்தின் நடவடிக்கையாகவோ அல்லது பிரிவு 12 இன் கீழ் உள்ள அதிகாரித்தின் நடவடிக்கையாகவோ இருக்கட்டும், அங்கெல்லாம் பிரிவு 14 உடனடியாகச் செயல்பட்டு, அத்தகைய அரசின் நடவடிக்கையை ரத்து செய்யும்.' இந்தக் கருத்து டி.எஸ்.நகரா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா [[1983] 1 எஸ்.சி.சி. 305] இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. மேனகா காந்தி எதிர் யூனியன் ஆஃப் இந்தியா [[1978] 2 எஸ்.சி.ஆர். 621 -என்ற வழக்கில், சட்டத்தின் பிரிவு 14 ஆனது, அரசின் செயல்களில் தன்னிச்சையானதை தடுக்கிறது மற்றும் நேர்மையான, சமத்துவமான அணுகுமுறையினை உறுதி செய்கிறது. தன்னிச்சையானதாகக்

காட்டப்படும் ஒரு நிர்வாகச் செயலானது நீதித்துறை மேலாய்வுக்கு உட்படாது அல்லது சட்டத்தின் பிரிவு-14 இன் வரம்பிற்கு உட்பட்டதாகவோ வராது என்று வாதிடுவது இது மிகவும் தாமதமானது.

19. உட்கூறு-25 (viii) ஆனது, தன்னிச்சையானது மற்றும் இந்திய அரசியலமைப்பின் சட்டத்தின் பிரிவு 14-ஐ மீறுவதாகக் கூற முடியுமா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

20. கவனிக்க வேண்டிய முதல் முக்கியமான விடயம் என்னவென்றால், இசைவுத் தீர்வுமன்றத்தைத் நாடும் தரப்பால் அற்பமான கோரிக்கைகளைத் தவிர்ப்பதற்காக கோரப்பட்ட தொகையில் 10% "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகை" செலுத்தப்பட வேண்டும். ஒரு அற்பமான உரிமைக்கோரலை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய முடியும் என்பது நன்கு தீர்க்கப்பட்ட ஒன்றாகும். எனவே, ***ஞான்டியோவ் சபாஜி நாயக் எதிர் பிரத்ந்யா பிரகாஷ் கடேகர்***, (2017) 5 எஸ்.சி.சி. 496 இல், இந்த நீதிமன்றம் கூறியதாவது:

> **"14.** சட்ட அமைப்பின் முழுவதுமாகவுள்ள நீதிமன்றங்கள் ---- இந்த நீதிமன்றமும் விதிவிலக்கு ------ வழக்குகளால் திணறுகிறது. அற்பமான மற்றும் ஆதாரமற்ற வகையில் தாக்கலாகும் வழக்குக்குகள் நீதி நிர்வாகத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக அமைகின்றன. அவர்கள் நேரத்தை எடுத்துக்கொண்டு உள்கட்டமைப்பை தடங்களுக்கு உள்ளாக்குகிறார்கள். உண்மையான வழக்குகளைக் கையாள்வதில் பயன்படுத்தப்பட வேண்டிய உற்பத்தி வளங்கள், காலங்கடந்த பிரச்சினைகளை நீட்டிப்பதன் மூலமும், பயனற்ற காரணங்களைப் பின்தொடர்வதன் மூலமும், தாமதத்திலிருந்து பயனடைவதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளால் சிதறடிக்கப்படுகின்றன. எந்தவொரு

வழக்காடியும் தாமதத்தில் நிலையான அக்கறையைக் கொண்டிருக்க முடியாது. துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய வழக்கு எடுத்துக்காட்டுவது போல, நீதியை வழங்கும் செயல்முறை, நேர்மையற்றவர்களால் முறையானவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு எளிய பிரச்சினை நீதிமன்றத்தின் நேரத்தை எவ்வாறு ஆக்கிரமித்துள்ளது என்பதையும் தவிர்க்க முடியாததை நீட்டிக்க தொடர்ச்சியான விண்ணப்பங்கள் எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதையும் தற்போதைய வழக்கு எடுத்துக்காட்டுகிறது. நீதியின் சமநிலை யாருக்கு சாதகமாக இருக்கிறதோ, அந்த நபர், ஒரு பழைய பிரச்சினையை மீண்டும் மீண்டும் முயற்சித்து, செயலிழக்கச் செய்துவிட்டார். இந்தச் சட்டம் ஒழுங்கு முறைகளில் இத்தகைய போக்கைக் கட்டுப்படுத்த, நீதிமன்றங்கள் ஒரு நிறுவனரீதியான அணுகுமுறையை பின்பற்ற வேண்டும், அது அத்தகைய நடத்தையைத் தண்டிக்கும். நீதிக்கான தாராளவாத அணுகல் என்பது குழப்பம் மற்றும் ஒழுக்கமின்மையை அணுகுவதைக் குறிக்காது. சட்டத்தின் காலதாமதத்தில் இருந்து இலாபம் ஈட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட வழக்கு உத்திகளால் நீதி மன்றங்கள் சீர்குலைக்க அனுமதிக்கப்படாது என்ற வலுவான செய்தியை தெரிவிக்க வேண்டும். இங்குள்ள அனைத்து நீதிமன்றங்களும் சீர்திருத்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், இப்போது நமது சமூகம் கட்டுப்பாடில்லாமல் ஏய்ப்பு அடிப்படையிலான சட்ட கலாச்சாரத்தை வளர்க்கும். இதுபோன்ற சூழ்நிலைகளை உறுதியாகக் கையாள்வது ஒவ்வொரு நீதிமன்றத்தின் கடமையாகும். அதிகபட்ச செலவுத்தொகைகளைச் சுமத்துவது அவசியமான கருவியாகும், இது களைகளை அகற்றவும், அற்பமான வழக்குகளைத் தாக்கல் செய்வதைத் தடுக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் நீதிமன்றங்கள் உண்மையான வழக்குகளைத் தீர்க்கவும், நீதி தேவைப்படுபவர்களின் கவலைகளுக்குப் பதிலளிக்கவும் நேரத்தை ஒதுக்க முடியும். உண்மையான குறைகள் உள்ள குடிமக்களுக்கு நீதிமன்றங்களை அணுகுவதை உறுதிசெய்ய, நிகழ்நேரச் செலவுத்தொகைகளைச் சுமத்துவதும் அவசியம். இல்லையெனில், முறையான வழக்குகளுக்கானக் கதவுகள் மூடப்பட்டு, இது தகுதியற்ற வழக்குகளின் அமைப்பால் நிரம்பி வழியும் நிலைக்குத் தள்ளும். அவ்வாறானதொரு நிலை வருவதை அனுமதிக்க முடியாது. எனவே, இது வெறும் விருப்புரிமை மட்டுமல்ல, நீதியைத் தோற்கடிக்க அல்லது தாமதப்படுத்த சட்டத்தின் வடிவங்களைப் பயன்படுத்துபவர்களால் சட்ட அமைப்பு சுரண்டப்படாமல் இருப்பதை உறுதிசெய்வது அனைத்து நீதிமன்றங்களுக்குமான கடமை மற்றும் கடப்பாடாகும். அற்பமான வழக்குகளை அதே முறையில் கையாள்வதற்கு அனைத்து நீதிமன்றங்களுக்கும் நாங்கள் கட்டளையிடுகிறோம்.

(முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது)

21. ஆகவே, இந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்துவது இசைவுப் பொதுவர் முன் வெற்றி பெற்ற தரப்பினருக்கும் மற்றும் அதிகபட்ச செலவுகளைச் சுமத்தி அற்பமான கோரிக்கையை நிராகரிப்பது பொதுவருக்கும் எப்போதும் திறந்தே இருக்கும்.

22. **ஜெனரல் மோட்டார்ஸ் (ஐ) (பி) லிமிடெட்** எதிர் **அசோக் ராம்னிக் லால் டோலட்**, (2015) 1 எஸ்.சி.சி. 429 வழக்கில் உள்ள இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பையும் நாம் கவனிக்கலாம், ஒரு அற்பமான வழக்குடன் நீதிமன்றத்தை அணுகும்போது தண்டனைக்குரிய நட்டஈடானது பின்பற்றப்படுகின்றது. அதில் இந்நீதிமன்றம் கூறியதாவது:-

"16. தண்டனைக்குரிய நட்டஈடுகளை வழங்குவதற்காக தேசிய ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவின் சரியான தன்மையை நாங்கள் தொடர்ந்து கையாள்வோம். அவ்வாறு செய்யும் முன்பு, எதிர்மேல்முறையீட்டாளர் நேரில் முன்னிலையாகி, தனது எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளில், மேல்முறையீட்டாளரிடம் விற்ற வாகனங்களுக்குரிய வருவாயைக் கணக்குக் கேட்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை எழுப்பியிருப்பதை நாம் கவனிக்கலாம். ஏற்றுக்கொண்டபடி, சம்பந்தப்பட்ட வாகனத்தை திரும்பவும் மேல்முறையீட்டாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளதை, எதிர்க்க எதிர்மேல்முறையீட்டாளர்-புகார்தாரருக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே, எழுப்பப்பட்ட மனுவானது எந்த தகுதியும் இல்லாமல் உள்ளது. மேலும் அதில் தண்டனைக்குரிய நட்டஈடு ரூ. 100 கோடிகள் மற்றும் அவரை இந்த நீதிமன்றத்தில் இழுத்ததற்காக நட்டஈடு, என அவர் தாக்கல் செய்த முறையீட்டில் முறையீட்டாளரின் கோரிக்கைக்கு அப்பாற்பட்டதாக கருதப்பட வேண்டியதில்லை. மேலும், இந்த நீதிமன்றத்தை அணுகியதற்காக வழக்கு அற்பமானது எனக் கண்டறியப்பட்டாலன்றி, எந்த வழக்காடியும் தண்டனைக்குரிய நட்டஈடுகள் மூலம் தண்டிக்கப்பட முடியாது."

23. இந்த வழக்கில் நிறுவப்பட்ட முக்கியமான கோட்பாடு என்னவென்றால், தொடங்கப்பட்ட வழக்கு அற்பமானது என்று முதலில் கண்டறியப்பட்டால், அதிகபட்ச செலவுகள் அல்லது தண்டனைக்குரிய நட்டஈடுகள் பின்பற்றப்படாது. எனவே, கோரும் தொகைக்கு 10% "அழைப்பின் பேரிலான வைப்பீட்டுத்தொகை" பெரிய தொகையாக இருக்கலாம், அற்பமான உரிமைக்கோரல்களுக்கு இது வெளிப்படையாக நெருங்கியத்

தொடர்புக்கொண்டதாக இல்லை என்பதால், இது அனைத்து உரிமைக்கோரல்களுக்கும் பொருந்தும் (அற்பமானவை அல்லது மற்றவையாகவோ இருப்பினும்). இசைவுத் தீர்வு மன்றத்தைத் நாடும் தரப்பினரால் செய்யப்படும் உரிமைக்கோரல் அற்பமானது என்று தீர்மானிப்பதற்கு முன் 10% வைப்பீடு செய்யப்பட வேண்டும். அத்தகைய நிபந்தனை நியாயமற்ற மற்றும் அநீதியான மற்றும் எந்த ஒரு நியாயமான மனிதனும் ஒப்புக்கொள்ளாத ஒன்று என்ற பொருளில் அத்தகைய சட்டப்பிரிவு தன்னிச்சையானது என்பதை தீர்மானிப்பதில் இதுவும் ஒரு முக்கியமான அம்சமாகும். உண்மையில், ஒரு கூற்று நிராகரிக்கப்படலாம், ஆனால் அது அற்பமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் மூன்று இசைவுப் பொதுவர்கள் நியமிக்கப்படும் இடத்தில், பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை தீர்வுங்கள் இருக்க முடியுமென்பதால், இது கோரிக்கை தள்ளுபடி செய்யப்படுவதோ அல்லது அனுமதிக்கப்படுவதோ தகுதியின் அடிப்படையில்தான் இருக்கிறதே தவிர, அற்பமானதனால் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டும் இரண்டு சாத்தியமான அல்லது நம்பத்தகுந்த கருத்துக்கள் இருக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது. மேலும், ஒரு உரிமைக்கோரல் நியாயமானது மற்றும் சரியானது என கண்டறியப்பட்டாலும், வைப்பீடு செய்யப்பட்ட தொகையை வெற்றிகரமான உரிமைகோரியவருக்குத் திருப்பித் செலுத்த வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு ஒப்பந்தம் சட்டவிரோதமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் அடிப்படையில் கோரிக்கை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட சேதங்களுக்கான கோரிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள். கோரும் தொகை வெற்றியடைந்து, ஒப்பந்தம் சட்டத்திற்குப் புறம்பானது என ரத்து செய்யப்பட்டு, ஒரு கோடி நட்டஈட்டுக் கோரிக்கையை, பத்து லட்சம் மட்டுமே கற்றறிந்த பொதுவரால் வழங்கப்பட்டால், வைப்பீடு தொகையில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே வெற்றி பெற்ற தரப்பினருக்குத் திருப்பித் தரப்படும். இசைவுத் தீர்வுமன்ற

நடவடிக்கைகளில் தோல்வியுற்ற தரப்பினர், அவர்களுக்கு எதிராக ஒரு தீர்ப்பு இருந்தாலும், வைப்பீட்டுத் தொகையில் மேற்கூறிய தரப்புக்கு பத்தில் ஒன்பது பங்கை இழக்க நேரிடுகிறது. இது முழு உட்பிரிவையும் முழுவதுமாக தன்னிச்சையாக ஆக்குகிறது, இது அதிகப்படியான அல்லது விகிதாசாரமாக இருப்பது மட்டுமல்லாமல், இசைவுத் தீர்வு மன்றத்தில் தோல்வியுற்ற ஒரு தரப்பினரால் கோரப்பட்ட வைப்பீட்டுத் தொகையுடன் ஒப்பிடுகையில், தீர்ப்பளிக்கப்பட்ட தொகைக்கு விகிதாச்சாரப்படி குறைவாக இருக்கும் வைப்புத்தொகையின் பகுதியை அனுமதிப்பது முற்றிலும் அநீதியான விளைவுக்கு வழிவகுக்கும்.

24. மேலும், இசைவுத் தீர்வுமன்றம் என்பது ஒரு முக்கியமான மாற்றுமுறை தகராறு தீர்வு செயல்முறையாகும், இது நீதிமன்றங்களில் அதிக வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், வழக்குச் செலவுத் தொகைகளின் காரணமாக ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதும் தீர்க்கப்பட்ட சட்டமாகும். வைப்பீடு செய்வதற்கான எந்தவொரு தேவையும் நிச்சயமாக இந்த செயல்முறையில் ஒரு தடையாக இருக்கும். மேலும், உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு விதிக்கப்படும் நீதிமன்றக் கட்டணத்தை விட, ஒரு பெரிய உரிமைக் கோரிக்கையின் 10% வைப்பீட்டுத்தொகை அதிகமாக இருக்கும் என்பதை கற்பனை செய்வது எளிது. இந்த நீதிமன்றம் **ஜம்மு & காஷ்மீர் அரசு எதிர் தேவ் தத் பண்டிட்**, (1999) 7 எஸ்.சி.சி. 339, வழக்கில் தீர்ப்புரைத்தது என்னவெனில்:-

> **"23.** இசைவுத் தீர்வுமுறை என்பது ஒரு முக்கியமான மாற்றுமுறை தகராறு தீர்வு செயல்முறையாக கருதப்படுகிறது, மேலும் நீதிமன்றங்களில் வழக்குகள் அதிகமாக நிலுவையில் உள்ளதாலும், வழக்குச் செலவினங்கள் அதிகமாக இருப்பதாலும் இது ஊக்குவிக்கப்பட வேண்டியதாகும். இசைவுத் தீர்வுமன்றம்

அனைத்தும் ஆர்வத்துடன் கவனிக்கப்பட வேண்டும், இதனால் வழக்குத் தொடுத்துள்ள பொதுமக்கள் இந்த செயல்முறையின் மூலம் தங்கள் தகராறுகளைத் தீர்ப்பதற்கான விரைவான செயல்பாட்டில் நம்பிக்கைக் கொள்வர். தற்போதைய வழக்கில் என்ன நடந்தது என்பது நிச்சயமாக ஒரு முரண்பாடான சூழ்நிலையாகும், இது தவிர்க்கப்பட வேண்டும். மொத்த ஒப்பந்தம் ரூ. 12,23,500. ஒப்பந்ததாரர் 50% க்கும் குறைவாக வேலை செய்திருந்தால், ஒப்பந்தம் நிறுத்தப்படும். அவருக்கு ரூ.5,71,900 ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. பிரிவு 20 -இன் கீழான மனுவில் அவர் ரூ.39,47,000-ஐ கோருகிறார், ஆனால் இசைவுப் பொதுவர் முன் அந்த கோரிக்கை ரூ. 63,61,000 ஆக உயர்த்தப்படுகிறது. அதில் ரூ.20,08,000-ஐ ஆண்டுக்கு 10% வட்டியுடன் மற்றும் அபராத வட்டி ஆண்டுக்கு 18% வீதம் கோருகிறார். இத்தகைய சாதுர்யமான இசைவுத் தீர்வு முறையானது இசைவுத் தீர்விற்கு உதவாது. மாறாக ஒட்டுமொத்த இசைவுத் தீர்வு மன்றத்துக்கும் கெட்ட பெயரைக் கொண்டுவருகிறது. உரிமைக்கோரல்கள் அனைத்து விகிதாச்சாரங்களிலும் உயர்த்தப்படும் போது, மற்ற தரப்பினருக்கு அதிக செலவுத்தொகை வழங்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அத்தகைய உயர்த்தப்பட்ட கோரிக்கைகளை முன்வைக்கும் தரப்புக்கு செலவுத்தொகையிலிருந்து விலக்கப்பட வேண்டும். எனவே, ஒப்பந்ததாரருக்கு ஆதரவாகவும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு எதிராகவும் ரூ.7500 ரூபாய் செலவுத்தொகை வழங்கப்பட்டதை நீக்கறவு செய்கிறோம்.

(முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது)

25. இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகள், இசைவுத் தீர்வுமன்றத்தின் முதன்மை நோக்கம் என்னவென்றால் வேகமான, பயனுள்ள, மலிவான மற்றும்

விரைவான முறையில் தகராறுகளில் இறுதி தீர்வை அடைவதே என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. எனவே, **சென்ட்ரோட்ரேட் மினரல்ஸ் & மெட்டல் இன்க். எதிராக ஹிந்துஸ்தான் காப்பர் லிமிடெட்,** (2017) 2 எஸ்.சி.சி. 228 என்ற வழக்கில், இந்த நீதிமன்றம் கூறியதாவது:

> "39. *யூனியன் ஆஃப் இந்தியா எதிர் உ.பி. ஸ்டேட் பிரிட்ஜ் கார்ப்ரேஷன் லிமிடெட்* [(2015) 2 எஸ்.சி.சி. 52] என்ற வழக்கில் இசைவுத் தீர்வு & இணக்கமுறைச் சட்டம் நான்கு அடிப்படைத் தூண்களைக் கொண்டுள்ளது என்ற கருத்தை [ஓ.பி. மல்ஹோத்ரா-இன் இசைவுத் தீர்வு மற்றும் இணக்கமுறைச் சட்டம் மற்றும் நடைமுறை (3 வது பதிப்பு திருமதி.இந்து மல்ஹோத்ரா, மூத்த வழக்கறிஞரால் திருத்தப்பட்டது)] ஏற்றுக்கொண்டது. பின்னர் அறிக்கையின் பத்தி 16 - இல் கவனிக்கப்பட்டது யாதெனில்:
>
> *"16.* முதல் தூணின் முதல் மற்றும் முக்கியக் கோட்பாடு 'இசைவுத் தீர்வு தீர்ப்பாயத்தால் நியாயமான, விரைவான மற்றும் மலிவான விசாரணை' ஆகும். தேவையற்ற தாமதம் அல்லது செலவு இசைவுத் தீர்வு மன்றத்தின் நோக்கத்தையே முறியடிக்கிறது. சுவாரஸ்யமாக, சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட *இரண்டாவது கோட்பாடு, தரப்பினருக்கு எந்த நடைமுறையை தேர்வு செய்வது என்பதில் உள்ள சுதந்திரமாகும்.* இதன் பொருள், இசைவுத் தீர்வு உடன்படிக்கையில் ஒரு குறிப்பிட்ட நடைமுறை பரிந்துரைக்கப்பட்டு, அதைத் தரப்பினர் ஒப்புக்கொண்டால், அது பொதுவாக செயல்படுத்தப்பட வேண்டும்."
>
> (அசலாக வலியுறுத்தப்பட்டது)

26. இதேபோல், **யூனியன் ஆ:ப் இந்தியா எதிர் வரீந்தேரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட்**, (2018) 7 எஸ்.சி.சி. 794 இல், இந்த நீதிமன்றம் கூறியதாவது:-

> **"12.** வேகமான, பயனுள்ள, மலிவான மற்றும் விரைவான முறையில் இறுதி முடிவை அடைவதே இசைவுத் தீர்வு மன்றத்தின் முதன்மையான நோக்கமாகும். இசைவுத் தீர்வுத் தொடர்பான சட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக, சட்டமியற்றும் மன்றமானது 1996-ஆம் ஆண்டு இசைவுத் தீர்வு மற்றும் இணக்கமுறைச் சட்டம் என அறியப்படும் சட்டத்தை கொண்டு வந்தது. இசைவுத் தீர்வு செயல்முறையை மிகவும் திறம்படச் செய்வதற்காக, இசைவுத் தீர்வு மன்றத்திற்கு உட்பட்ட வழக்கில் நீதிமன்றங்களின் பங்கை சட்டமன்றம் கட்டுப்படுத்தியது. சட்டத்தின் பிரிவு - 5 ஆனது குறிப்பாக நீதிமன்றங்களின் தலையீட்டை ஓரளவு கட்டுப்படுத்தியது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே, இசைவுத் தீர்வு மன்றத்திற்கு உட்பட்ட பிரச்சனையில் தலையிட நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. அத்தகைய தலையீடு இசைவுத் தீர்வு நடவடிக்கைக்கு முன், அல்லது அதற்குப் பிறகு வழக்கின் தன்மையைப் பொறுத்து இருக்கலாம். சுருக்கமாக, இரு தரப்பினருக்கும் அநீதி ஏற்படாத வரை, இசைவுத் தீர்வு விஷயத்தில் நீதிமன்றம் தலையிடாது.

27. 10% முன் வைப்பீட்டுத் தொகை மூலம் இந்த மாற்றுமுறை தகராறு தீர்க்கும் செயல்முறையைத் நாடுவதில் இருந்து ஒரு தரப்பினரை இசைவுத் தீர்வு மன்றத்திற்குத் தடுப்பது, நீதிமன்ற அமைப்பைத் தடுக்கும் நோக்கத்திற்கு மாற்றாக இசைவுத் தீர்வு மன்றத்தை ஊக்கப்படுத்தாது, அது மேலும் இசைவுத் தீர்வு செயல்முறையை பயனற்றதாகவும் செலவு உயர்ந்ததாகவும் மாற்றுமுறையாகும்.

28. இந்த எல்லா காரணங்களுக்காகவும், ஒப்பந்தப்புள்ளியை அழைக்கும் அறிவிப்பின் உட்கூறு 25(viii)-ஐ நாங்கள் ரத்து செய்கிறோம். இந்த உட்கூறு 25-இன் மீதமுள்ள பகுதியிலிருந்து பிரித்தெடுக்கக்கூடியதாக இருப்பதால், உட்கூறு 25-இன் மீதமுள்ள பகுதிகளை பாதிக்காது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நீக்கறவு செய்யப்பட்டு மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."